# வாக்கியம் அமைத்தல்

( உ சொற்கள் )

1. உரம்

பயிர்களுக்கு உரம் இட வேண்டும்.

2. உறவு

அண்ணன் தங்கை உறவு அன்பானது.

3. உண்டியல்

கோவில் உண்டியலை திருடர்கள் திருடினர்.

4. உற்சாகம்

காலையில் நமது உள்ளம் உற்சாகமாக இருக்கும்.

5. உறக்கம்

மனிதனுக்கு ஏழு மணி நேரம் உறக்கம் தேவை.

6. உலகம்

உலகம் ஐம்பூதங்களால் ஆனது.

7. உடுக்கை

சிவபெருமான் கையில் உடுக்கை இருக்கும்.

8. உணவு

உயிர் வாழ உணவு அவசியம்.

9. உருளைக்கிழங்கு

இவ்வருடம் உருளைக்கிழங்கு விளைச்சல் அதிகம்.

10. உளி

சிற்பி உளியைக் கொண்டு சிலை செதுக்கினார்.

11. உடல்

மனிதன் தன் உடலை பேண வேண்டும்.

12. உடன்பிறப்பு

உடன்பிறப்புகளுடன் சண்டை போடக்கூடாது.

13. உதடு

குழந்தை உதட்டில் எறும்பு கடித்துவிட்டது.

14. உதவி

ஏழைகளுக்கு உதவி செய்ய வேண்டும்.

15. உயரம்

பனை மரம் உயரமானது.

16. உடும்பு

வேடன் உடும்பை வேட்டையாடினான்.

17. உரல்

தாய் யசோதா, கண்ணனை உரலில் கட்டினாள்.

Notebook Writer
Notebook Writer
Notebook Writer
Notebook Writer